2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. மு. கண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன?*

திரு. மு. கண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 56–ன்கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதனை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது ஆய்வில் இருக்கிறது. அவை எல்லாம் 2 ஆம் தேதிக்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். ஆய்வில் இருக்கின்றன. Reply கேட்டிருக்கிறோம்; வந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.*

திரு. மு. கண்ணப்பன்: *5 நாட்கள் ஆகின்றன கொடுத்து. அவசரமான பிரச்சினை; அதனால்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் காலையில் வந்து கேட்டீர்கள். நான் உங்களுக்குப் பதில் சொன்னேன். நீங்கள் அதைக் கேட்டுவிட்டு இங்கே வந்து மீண்டும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினால் என்ன அர்த்தம்? அங்கே சரி என்று சொல்லிவிட்டு, திரும்ப இங்கே வந்து கேட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காலையிலே என் அறைக்கு வந்தீர்கள். நான் நிலவரத்தைச் சொன்னேன். சொன்னவுடன் ஒப்புக்கொண்டு, 'இரண்டாம் தேதிக்குப் பிறகு எடுத்துக்கொள்ளுங்கள்' என்று என்னிடம் சொல்லிவிட்டு வந்தீர்கள். திரும்பவும் அந்த subject–ஐக் கிளப்பினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆளுநர் உரைமீது விவாதம் நடக்கும்போதும், வரவு–செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடக்கும்போதும், பல ஆண்டுக்

காலமாக இந்த அவையில் ஒத்திவைப்புத் தீர்மானங்களோ அல்லது வேறு எதையுமே எடுப்பதில்லை என்றும், இந்தத் தீர்மானங்களை எல்லாம் மானியக் கோரிக்கைகள் வரும்போது எடுத்துக்கொள்வது என்றும் ஏற்கெனவே பேரவைத் தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அதே முறையைத்தான் நீங்களும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் பின்பற்றி கொண்டிருக்கிறேன்.

3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு. (குறுக்கீடுகள்) அது நேற்றே முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு, பேசுங்கள்.

***திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயக் குடும்பத்தில், வறுமையிலும் வற்றாத தேசப் பற்றுக் கொண்ட தியாகி இராமசாமி–நல்லம்மாள் இவர்களின் மகனாகப் பிறந்து, கழகத்தின் அடிமட்டத் தொண்டனாகிய என்னை, அம்மாவின் ஆசியால் ஒன்றிய துணைச் செயலாளராக்கி, திருப்பெயர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தலைவராக்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் இயக்குநராக்கி, கழகத்தின் ஒன்றியச் செயலாளராக்கி, மாவட்டக் கழகச் செயலாளராக்கி, திருநாவலூர் தொகுதிக்கு இந்த எளியவனைச் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்களின் குல தெய்வமாம், தாய் தந்தையற்ற எனக்குத் தாயும், தந்தையுமாகி வாழ்வளித்த தெய்வம், மங்காப் புகழ் கொண்ட மாசற்ற தலைவி, உலகமே போற்றும் உன்னதத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த ஒப்பற்ற தலைவி, அதிசயத்தின் ஆணி வேர் 'எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதத்தில் நன்றியைச் சமர்ப்பித்து, அவர் இருக்கும் திசை நோக்கிப் பணிவாக வணங்கி' எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு திருநாவலூர் தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்ட, கடைகோடி கழகத் தொண்டனான என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய திருநாவலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது